

# அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ?

(ஆவிகளைப் பகுத்துணரவைக்கும் புத்தக ஆக்கம் : சகோ ஆ. சசிக்குமார்)

**பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங்கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.** (1 **யோவான்** 4:1)

ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்தவனாக வாழ்வது அவசியம்! அதற்கு நடைமுறை வாழ்வு முழுவதிலும் தேவசித்தத்தின்படி வாழவேண்டும்! அந்த தினசரி - நடைமுறை வாழ்வில் தேவசித்தம் செய்து பழகவே, ஆவிக்குரிய ஐக்கியங்கள், சபைகூடிவருதல், ஆவிக்குரிய கூட்டங்கள் ஆகியன உதவுகின்றன. **ஆனால், அனேகக் கூடுகைகளில் பரிசுத்த ஆவியானவர் இல்லை!** "அங்கே செயல்படுகின்ற ஆவி, எந்த ஆவி? என கண்டு உணரவேண்டியது" அவசியம்! ஏனென்றால், **நாம்**

**எந்தவிதமான ஆவியை உடைய ஐக்கியத்தில், ஐக்கியம் கொள்கிறோமோ, அந்தவிதமான ஆவியே, நம் தனிப்பட்ட வாழ்விலும், குடும்பத்திலும், செயல்பட்டு "அதன் சித்தத்தை" நம்மில் நிறைவேற்றி விடுகின்றது!**

***"ஒரு பாவத்தை, இச்சையை விட்டுவிட முயற்சிக்கிறீர்கள் ஆனால், முடிவில் தோற்று விடுகிறீர்களா? அப்படியானால், நாம் எந்த ஆவிக்குக் கீழ் இருக்கிறோம் என யோசிப்பது அவசியம்! -*** *இந்த காரியம் ஒரு உதாரணம் மட்டுமே!"*

**தேவசித்தம்** என்று ஒன்று உண்டு, அதுபோலவே, சாத்தானின் சித்தம் அல்லது திட்டம் ஒன்று உண்டு! பரிசுத்த ஆவிக்கு எதிராக, அசுத்த ஆவி உண்டு! கிறிஸ்துவுக்கு எதிராக அந்திக்கிறிஸ்து உண்டு! **நாம் சத்தியத்தில் தெளிவாகாத வரைக்கும் ஏதாவது ஒன்றின் கீழ் இருப்போம்!**

ஒரு மனிதனைத் தேவனுக்கு எதிராக அல்லது, தேவனுக்கு தூரமாக மாற்றுவதே மற்ற ஆவிகளின் முக்கியமான வேலை! வேதம் பின்வரும் ஆவிகளைப் பற்றிப் பேசுகிறது. அந்த ஆவிகள், இன்றும் ஒரு மனிதனுக்குள் இருந்து செயல்படக்கூடும்! அல்லது ஒரு மனிதன் வழியாகச் செயல்படக்கூடும்! **நாம் எந்த ஆவிக்குக் கீழ் இருக்கிறோம் என தெளிவடையவே இந்த புத்தகத்தின் ஆக்கம்! வேதத்தின் வெளிச்சத்தில் தொடர்வோமா?**

## 1) அற்புதங்களைச் செய்யும் பிசாசுகளின் ஆவிகள்!

**அவைகள் அற்புதங்களைச்செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப்போகிறது. (வெளி 16:14)**

கடைசி நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற நம் காதுகளில் அதிகம் கேட்கும் வார்த்தை "அற்புதம்!" எத்தனை பாடல்களில் இந்த வார்த்தை வருகின்றது? எத்தனை ஆராதனை வேளைகளில் சொல்லப்படுகின்றது? எத்தனை ஆவிக்குரிய சுவரொட்டிகளில் அற்புத சுக விளம்பரம் காணப்படுகின்றது? ஜாக்கிரதை! மனந்திரும்புங்கள்! பாவத்தை அறிக்கை செய்யுங்கள்! பரிசுத்தமாயிருங்கள்! உண்மையாய் இருங்கள் - என்றெல்லாம் கேட்கமுடிகிறதா இன்று?

மனிதர்கள், மனம் திரும்பி பரலோகம் செல்வதைத் தடுக்கும் சாத்தானின் ஆயுதமாக "அற்புதம்" விளங்குகிறது!

அதற்காக **ஆண்டவராகிய தேவன் அற்புதம் செய்யாதவர் அல்ல! அவர் அற்புதங்களின் தேவன் தான்! தேவையான இடங்களில் இன்றும் அவர் அற்புதங்கள் செய்கிறவர்தான்!** ஆனால், **அந்த அற்புதத்தின் அடுத்த கட்டம், இரட்சிப்பாக இருக்கும். அடுத்ததாக ஆவிக்குரிய வளர்ச்சி இருக்கும்!** ஆனால், அற்புதங்களைச் செய்யும் பிசாசுகளின் ஆவிகள் செய்யும் அற்புதங்களின் அடுத்த கட்டம்? சாட்சி எனும் பெயரில் மேடையில் அரங்கேற்றப்பட்டு, மனுஷரின் பெருமை மெருகூட்டப்பட்டு, விசேஷித்த காணிக்கை சேகரிக்கப்பட்டு, அடுத்த திட்டங்கள் போடப்பட்டு, அடுத்த கூட்டங்களுக்கு ஆட்கள் கூட்டப்பட மீண்டும் மீண்டும் இது ஒரு தொடர்கதையாகவே இருக்கும்.

அந்த ஆவிக்குக் கீழே செயல்படும் ஆட்கள் பணத்தால் நிறைய, விசுவாசிகள் (!) அடுத்த கட்டத்துக்கு நகரமுடியாமல் ஆகி நிற்கும் சூழல்தான் இருக்கும்! மீண்டும் அடுத்த அற்புதத்துக்கு ஆயத்தமாகிக்கொண்டு இருப்பார்கள்! மனந்திரும்புதல் கிட்டத்தட்ட மறந்தே போயிருக்கும்! **சுகம் அல்ல, சுத்தமே அற்புதம் என ஆவியானவர் கதறிக்கொண்டு இருப்பார்! நாம் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறாமா? நம் இருதயம் சதா, பரிசுத்தத்தையே யோசிக்கும்!**

2) **அசுத்த ஆவி!**

**அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (மத்தேயு 10:1)**

பரிசுத்தத்துக்கு எதிரான எல்லா மன நிலையும் அசுத்த ஆவிக்கு உரியவைகள்! ஒரு உதாரணமாக சிந்தித்துப் பாருங்கள், இன்றைய நாட்களில் எந்த தொலைக்காட்சித் தொடர் அன்பை போதிக்கிறது? ஒழுக்கத்தை போதிக்கிறது? ஆவிக்குரியவர்களின் உறவுகள் கூட "மடியில் நெருப்பை வைத்துக்" கொண்டு உள்ளதை கண்கூடாகக் காணமுடிகிறது என்றால், அசுத்த ஆவிகளின் செயல்பாடுகள், தொலைக்காட்சியில், கைபேசியில், கம்ப்யூட்டரில், கண்ணெதிரில், மன சிந்தனையில் உண்டே! அப்படி உண்டென்றால், நாம் அசுத்த ஆவியின் ஆளுகையில் என்று உறுதியாகச் சொல்லிவிடலாம்! **பரிசுத்த ஆவியின் ஆளுகையில் அசுத்தத்தின் சிந்தனைக்கு இடமே இல்லை!**

உங்களால் இரகசிய பாவங்களில் இருந்து விடுபடமுடியவில்லையா? நீங்கள் அசுத்த ஆவிகளின் கட்டுப்பாட்டில் இருக்கலாம்! **நீங்கள் வாசிக்கும் இந்தக் காரியங்கள், உங்களை, விடமுடியா பாவப் பழக்கங்களில் இருந்து இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தினால் விடுவிக்கப்படவே எழுதப்பட்டு இருக்கிறது! விசுவாசியுங்கள்! ஜெபியுங்கள்! விடுதலையின் ஆவியானவர், விடுதலை கொடுப்பார்!**

அசுத்த ஆவிகள், ஒரு மனிதனுக்குள் அசுத்த சிந்தனையைத் தோற்றுவித்து, வியாதிகளுக்குள் நடத்தி, வேதனைகளை ஏற்படுத்தி,

மரணத்தை விரும்பவைக்கும்! தற்கொலைகளுக்கு நேராக நடத்தும்! எனவேதான் வேதம், **"பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்"** என்று எச்சரிக்கிறது!

**பரிசுத்த ஆவியானவர், நம் சிந்தனையைப் பரிசுத்தப்படுத்துகிறவர். எனவே, நம் வார்த்தைகள் பரிசுத்தமாகி, செயல்களும் பரிசுத்தமாகும்!**

ஆடைகளை கவர்ச்சியாக அணியவைப்பது; எதிர்பாலரைக் கவரவைப்பது; சிந்தைக்குள் ஒளிந்து செயல்படுவது; ஊழியரையும் கவிழ்க்க முனைவது; கேடான உறவுகளால் குடும்பங்களை கவிழ்ப்பது; காண்கிற அனைத்திலும் இச்சையூட்டுவதே அந்த அசுத்த ஆவியின் வேலை! சுற்றிலும் அனேகரை கவனித்துப்பார்த்தால் அறியலாம்! கவனித்து நடப்போம்!

4) **பொல்லாத ஆவிகள்!**

**அந்தச் சமயத்திலே நோய்களையும் கொடிய வியாதிகளையும் பொல்லாத ஆவிகளையும் கொண்டிருந்த அநேகரை அவர் குணமாக்கி, அநேகங்குருடருக்குப் பார்வையளித்தார். (லூக்கா** 7:21)

பொல்லாத ஆவி என்றால், கலங்கப்பண்ணுகிற; காயப்படுத்துகிற (மனதிலோ, சரீரத்திலோ); கெடுக்கிற; பெலவீனப்படுத்துகிற; எரிச்சலை ஏற்படுத்துகிற; இயல்பாய் இருக்கவிடாமல் தடுக்கிற ஆவி! எனவேதான் அது பொல்லாத ஆவி! இந்த குணாதிசயங்கள் நம்மிடம் உண்டா?

நீங்கள் செல்லுகின்ற சபையில், அல்லது ஐக்கியத்தில் உங்களைக் காயப்படுத்தி, எரிச்சலுண்டாக்கி, ஆவிக்குரிய கெடுதலை ஏற்படுத்தி, எரிச்சல்படுத்தும்படிதான் பேசுகிறார்களா? **வேதத்தின்படியான தேவசெய்தியானது, காயங்கட்டவேண்டும்! காயங்களை ஆற்றவேண்டும்! சீர் செய்யவேண்டும்! குணப்படுத்தவேண்டும்! ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும்! இதுதான் பரிசுத்த ஆவியானவரின் தேவசெய்தி; உங்களுக்குத் தேவையான செய்தி! கண்டுணருங்கள்!**

## 5) கன நித்திரையின் ஆவி!

**கனநித்திரையின் ஆவியையும்**, **காணாதிருக்கிற கண்களையும்**, **கேளாதிருக்கிற காதுகளையும்**, **தேவன் அவர்களுக்குக் கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடியாயிற்று. (ரோமர்** 11:8)

உங்களுக்கு சபையில் சுகமான தூக்கம் வருகிறதா? வேதத்தைக் கையிலெடுத்தால் கொட்டாவி வருகிறதா? ஜெபிக்க முடியாத அளவுக்கு தூக்கக் கலக்கமா? ஆவிக்குரிய கூட்டங்களுக்குச் செல்ல, சபைக்குச் செல்ல சோர்வாக உணர்கிறீர்களா? கன நித்திரையின் ஆவி செயல்பட்டுக்கொண்டு இருக்கலாம்!

ஆவிக்குரிய செயல்களாகிய வேதம் வாசித்து தியானித்தல், ஜெபித்தல், கர்த்தரைத் துதித்தல், ஊழியம் செய்தல் இவைகளில் நம் மனம் **உற்சாகமாக** இருக்கிறதெனில் நாம் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையில்! இல்லையெனில், அந்த ஆவிகளை, ஜெபித்து, ஜெயித்து, உற்சாகமடையவேண்டியது அவசியம்!

6) **பொய்யின் ஆவி!**

**அப்பொழுது அது: நான் போய், அவனுடைய தீர்க்கதரிசிகள் எல்லாரின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது. அதற்கு அவர்: நீ அவனுக்குப் போதனைசெய்து அப்படி நடக்கப் பண்ணுவாய்; போய் அப்படியே செய் என்றார். ஆனதினால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளின் வாயிலே கட்டளையிட்டார்; கர்த்தர் உம்மைக்குறித்துத் தீமையாகச் சொன்னார் என்றான்.** (2 **நாளாகமம்** 18:21-22)

**பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?** (**அப்** 5:3)

பரிசுத்த ஆவியானவருள்ள இடத்தில் உண்மை இருக்கும். உண்மை மட்டுமே இருக்கும். பேச்சில் பொய்! பிரசங்கத்தில் பொய்! காணிக்கை சேகரிப்புக்காக பொய்! சமாளிப்புக்காகப் பொய்! வெளியே ஒரு வாழ்க்கை, அந்தரங்கத்தில் ஒரு வாழ்க்கை! என எங்கே யாரிடம் காணப்படுகிறதோ, அங்கே பொய்யின் ஆவியுடைய ஆளுகை உண்டு!

சத்திய (உண்மையின்) ஆவியானவரிடம் பொய் இருக்காது! நாம் பாடுபடவேண்டும் என்றாலும், பவுலிடம் சொன்னதுபோல தெள்ளத்தெளிவாகச் சொல்லிவிடுவார்! சத்தியத்தின்படி நடவாத, ஆனால் சத்தியம் போல, போதிக்கிற எவரது வாயிலும் பொய்யின் ஆவி உண்டு! நாம் இருக்கும் இடத்தில், நமக்கு உள்ளே என சகலத்தையும் ஆராய வேண்டிய நேரம் இது. **சத்திய ஆவியானவரிடம் வருவோம்! சகல சத்தியத்துக்குள்ளும் நம்மை நடத்துகிறவர் அவரே!**

7) **எரிச்சலின் ஆவி!**

**எரிச்சலின் ஆவி அவன்மேல் வந்து**, **அவன் அவனுடைய மனைவி தீட்டுப்படுத்தப்பட்டிருக்க**, **தீட்டுப்படுத்தப்பட்ட தன் மனைவியின்மேல் குரோதங்கொண்டிருந்தாலும்**, **அல்லது அவன் மனைவி தீட்டுப்படுத்தப்படாதிருக்க**, **எரிச்சலின் ஆவி அவன்மேல் வந்து**, **அவன் அவள்மேல் குரோதங்கொண்டிருந்தாலும்**, **(எண்ணாகமம்** 5:14)

எரிச்சலின் ஆவி, ஒரு குடும்பத்தைப் பிரிப்பதில், சபையைப் பிளப்பதில் தன் வேலையைச் சரியாகச் செய்துவிடும்! தேவ ஊழியரோ, ஒரு விசுவாசியோ எரிச்சலின் ஆவியை கொண்டிருக்கமாட்டார்கள்! **சாந்தமான, இணக்கமான ஆவியே, பரிசுத்த ஆவியானவர் அளிப்பது!** ஒழுங்கற்று நடக்கிற எவரிடமும், ஒரு ஊழியர் எரிச்சலோடு பேசாமல், சாந்தமாய் பேசி அவர்களை சீர்பொருந்தப் பண்ணவேண்டும்!

உண்மையுள்ள மனுஷனே பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்! பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குள் இருப்பவனே, உண்மையான மனுஷனாய் இருப்பான்! **அமைதியாக எதையும் எதிர்கொள்ளவைப்பவர் பரிசுத்த ஆவியானவரே!**

8) **பொல்லாப்பு உண்டாக்கும் ஆவி!**

**அபிமெலேக்குக்கும் சீகேமின் பெரிய மனுஷருக்கும் நடுவே பொல்லாப்பு உண்டாக்கும் ஆவியை தேவன் வரப்பண்ணினார். (நியா** 9:23)

கணவன் / மனைவிக்குள்ளே பிரிவினை, பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையே பிரிவினை, ஆவிக்குரிய ஐக்கியங்களுக்குள்ளே பிரிவினை -- இவைகளை உண்டாக்குவது பொல்லாப்பை உண்டுபண்ணும் ஆவி! இதனை விரட்டவேண்டியது அவசியம்! குடும்பத்தில், சபையில், ஐக்கியம் என்பது, தேவன் ஆவியானவர் வழியாக அளிக்கும் ஈவு! பொல்லாப்பை உண்டுபண்ணும் ஆவி அந்த ஐக்கியத்தைக் கெடுக்க முயற்சிக்கும்!

பொல்லாங்கான எல்லாவற்றையும் செய்து, பிரிவினையை ஏற்படுத்த முயலும் அந்த ஆவியை, ஜெபத்தினால், உபவாசத்தினால், தேவனோடு கொள்ளும் ஐக்கியத்தால் வெல்லமுடியும்! **பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தவர் ஆண்டவராகிய இயேசு! குமாரனின் ஆவியானவர் சமாதானத்தை, ஐக்கியத்தை ஏற்படுத்தட்டும்!**

## 9) தாறுமாறுகளின் ஆவி!

**கர்த்தர் அதின் நடுவில் தாறுமாறுகளின் ஆவியை வரப்பண்ணினார்; ஆனதுகொண்டு வெறியன் வாந்திபண்ணி, தள்ளாடித் திரிகிறதுபோல, அவர்கள் எகிப்தை அதின் எல்லாச்செய்கையிலும் தள்ளாடித் திரியப்பண்ணுகிறார்கள்.** (**ஏசாயா** 19:14)

ஆவிக்குரிய வாழ்வில் எப்போதும் தள்ளாடவைப்பது தாறுமாறுகளின் ஆவி! எவ்வளவு தீர்மானங்கள் எடுத்தாலும், அதில் நிலைத்து நிற்கமுடியாதபடி, இந்த ஆவி செயல்படுகிறது! சபைக்குப்போகும்போது, நல்ல வார்த்தைகளைக் கேட்கும்போது, திடீரென சில முடிவுகளை எடுப்போம்! ஆனால், வெளியே சென்றால் முடிவு மாறிவிடும். பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று, வெகு இயல்பாக பாவம் செய்யவைத்துவிடும்!

நம் பரிசுத்த ஆவியானவர், நிலையான ஆவியானவர்! வழுவாதபடி காப்பவர், மாசற்றவர்களாய், பிதாவின் சமூகத்தில் நம்மை நிறுத்த வல்லவர்! நாம் எந்த ஆவியின் ஆளுகையில்? சிந்திப்போமா? அல்லது நம்மைச் சுற்றி செயல்பட்டுக்கொண்டு இருப்பது யார்? யோசிப்போமா?

## 10)வேசித்தன ஆவி!

**என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள்; அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கிறார்கள்; வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பித் திரியப்பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம்போனார்கள். (ஓசியா 4:12)**

வேசித்தன ஆவி என்பது விக்கிரக ஆராதனைக்கு நேராக, ஜோசியம் பார்க்க, அஞ்சனம் பார்க்க, குறி சொல்வதைக் கேட்க, எதிர்காலத்தைப் பற்றி ஆருடம் பார்க்க, ஒரு மனிதனை நடத்தும்! **விபச்சார ஆவியும் - வேசித்தன ஆவியும் கிட்டத்தட்ட ஒன்றே!** விக்கிரக ஆராதனை, விபச்சாரத்திற்கு இணையானது! அதன் நோக்கம், தேவனை விட்டு மனிதரை தூரமாக்குவது!

பொருளாசை; பண ஆசை ஓர் விக்கிரக ஆராதனை! அதற்கு நேராக பாதை அமைப்பது வேசித்தன ஆவியே! பரிசுத்த ஆவியானவர், ஆவிக்குரிய சிந்தையை நமக்குத் தந்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு நேராக நடத்துவார். பணத்தைப் பெருகச்செய்யும்படி, செழிப்பை போதித்து, தேவனுடைய பிள்ளை என்றால், எல்லா உலக ஆசீர்வாதங்களும் பெற்றிருக்கவேண்டும்; பாடுகள் வரக்கூடாது என போதிப்பதெல்லாம் வேசித்தன ஆவியே! **தேவபிள்ளைகளின் வாழ்வில் குறைகள்; தேவைகள் எல்லாம் வரும்! அதன் நடுவே, தம் கிருபையைக் கொடுத்து அழகாய் நடத்துகிறவர்தான் நம் தேவனாகிய கர்த்தர்! புரிந்து செயல்படுவோம்!**

11) **ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவி!**

**அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். (எபேசியர் 2:2)**

ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவி, ஒரு மனிதனிடம் கிரியை செய்து, அம்மனிதனைக் கீழ்ப்படியாதவனாகச் செய்துவிடும்! கீழ்ப்பாடியாமை எங்கெல்லாம் உள்ளதோ, அங்கேல்லாம் அந்த ஆகாயத்து அதிகாரப் பிரவுவின் ஆளுகை இருக்கும்!

**தேவன் தெரிந்தெடுத்த பாத்திரங்கள் எல்லாம் கீழ்ப்படிந்து நடக்கும் உன்னத பாத்திரங்கள்! பரிசுத்த ஆவியானவரால், நிறைவாய் நிரம்பியிருந்த ஆண்டவராகிய இயேசு, எப்படிப்பட்ட கீழ்ப்படிதலுள்ளவராய் இருந்தார்? "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலிப்பியர் 2:8)**

கடிந்துகொள்ளுகிற, கண்டித்து உணர்த்துகிற வேத வார்த்தைகளுக்கு, கீழ்ப்படியும் இருதயம் பரிசுத்த ஆவியானவரால் ஆளுகை செய்யப்படுகிறவர்களுக்கே இருக்கும்!

## 12) வஞ்சிக்கிற ஆவி!

**ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்.** (1 **தீமோத்தேயு** 4:1)

வஞ்சிக்கிற ஆவி என்றால், ஏமாற்றுகிற ஆவி! இதைச் சொல்ல கடினமாக இருந்தாலும், பரிசுத்த வேதம் தெள்ளத்தெளிவாகச் சொல்லிவிடுகிறது! இது மிக அதிகமாக, பொய்யான ஊழியர்களின் வழியே செயல்படுகிற ஆவி! **நீங்கள் எந்த ஒரு ஊழியரின் அடிச்சுவடுகளையும் அல்ல, ஆண்டவராகிய இயேசுவின் அடிச்சுவடுகளில் மாத்திரமே நடக்க அழைக்கப்பட்டுள்ளீர்கள்!**

உங்கள் ஊழியரை, சபைப் போதகரை, கூட்டங்கள் நடத்தும் அமைப்பாளரை சத்திய வேதத்தின்படி சோதித்துப்பாருங்கள்! அவர் காணிக்கை; தசமபாகம் குறித்து மிக கவனமாக இருக்கிறாரா? தரவில்லை என்றால் சாபம் வரும் என மிரட்டுகிறாரா? அனேக திட்டங்களை அறிவித்து, அதில் நீங்கள் பங்காளரானால், குறிப்பிட்ட ஆசீர்வாதம் கிடைக்கும் என **வேதவசனத்தையே வைத்து** சொல்கிறாரா? தன் பிள்ளைகள் உயர்தரமான, தேவையற்ற செலவுகள் செய்ய அனுமதிக்கிறாரா? சபையின் வருமான விபரங்களைத் தவிர்த்து, செலவுகளை முன்வைக்கிறாரா? ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் மட்டுமே அவருக்கு உழைக்கிற நாளாக இருக்கிறதா? சபைக்கு வராத, பிரச்சனைகளை அனுபவிக்கிற ஏழை விசுவாசிகளை அசட்டை செய்கிறாரா? தேவையற்ற செலவுகளை செய்கிறவரா? - நன்றாகப் புரிந்துகொள்ளலாம், அது **வஞ்சிக்கிற ஆவியின் தூதன்**

என்று! ஏன் இந்த வஞ்சிப்பு? தங்கள் வயிற்றை நிரப்புவது ஒன்று! மக்களை அப்படியே அறியாமையில், தன்னைக்குறித்த பயத்தில் வைத்திருப்பது அடுத்தது! **சத்தியத்தை சத்தியமாகச் சொல்லும் சபையை; ஊழியரை நாடுவது நல்லது!**

13) **குறிசொல்லுகிற ஆவி!**

**நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.** (அப் 16:16)

ஜோசியம் பார்ப்பது, குறிகேட்பது, நல்ல நேரம்; நல்ல நாள் பார்ப்பது, எதிர்காலத்தைக் குறித்து அறியமுற்படுவது என எல்லா வகையிலும் வஞ்சகமாக தேவபிள்ளைகளை சிக்கவைப்பது இந்த ஆவியே! அனேகமாக நண்பர்கள், பக்கத்துவீட்டு கிறிஸ்தவரல்லாதோர் வழியாக, "கொஞ்சம் பார்த்துட்டு வரலாம் வாங்க!" என இயல்பாக அழைத்து சிக்கவைத்துவிடும்!

வாக்குத்தத்தம் எனும் பெயரில் அனேக (ஆயிரக்கணக்கான) சபைகளில் இந்த ஆவியே செயல்படுகிறது! செழிப்பை கண்முன் வைத்து அதை நோக்கி ஓடவைக்கிறது! விசுவாசிகளை ஒரே "ஆசீர்வாத வசனத்தின் கீழ்" கட்டிப்போட்டு, சத்தியத்தை மறைக்க முயற்சிப்பது இந்த ஆவி! எச்சரிக்கை! கர்த்தருக்குப் பிடிக்காத அருவருப்பு இது!

**அப்படியே சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமல், கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தினிமித்தமும், அவன் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படிக்குத் தேடினதினிமித்தமும் செத்துப்போனான்.** (1 **நாளா** 10:13)

14) **பலவீனப்படுத்தும் ஆவி**!

**அப்பொழுது பதினெட்டுவருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்.** (**லூக்கா** 13:11)

எங்கே போனாலும் தடைகளை பலவீனங்களை ஏற்படுத்தும் ஆவி இது! வருடக்கணக்கில் தீராத பலவீனங்கள் இவைகளால் ஏற்பட்டிருக்கலாம்! இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்தில் ஓடட்டும் இப்பொழுது! தேவையற்ற மருத்துவ செலவுகள் மாறட்டும்!

## 15) உலகத்தின் ஆவி!

**நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். (1 கொரிந்தியர் 2:12)**

உலகத்தின் ஆவி! இது, தற்கால உலக வழக்கத்துக்கு நேராக மனிதர்களை நடத்தும்! நவ நாகரீக காரியங்களை அவசியமின்றி வாங்கவைக்கும்! பயன்படுத்தி சிக்கவைக்கும்!

ஆவிக்குரிய வாழ்வில் நவ நாகரீகமாக முடிவெட்டுவது தவறல்ல, விதவிதமாக தாடிவைப்பது தவறல்ல, உடையணிவது தவறல்ல, பாவம் செய்துவிட்டாலும் தவறல்ல எனப் போதிக்கும் ஆவி இது!

ஆட்டம், பாட்டம், இசை, பேரொளிக்கு நடுவே, வண்ணமயமான, நரகப் புகையில் சிக்கவைக்கும் கொடூர ஆவி இது!

தேவன் ஒழுங்கின் ஆண்டவர்! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தன் வாழ்வில் எந்தவிதமான ஆராதனை முறைகளைக் கையாண்டார்? தம்மை பரிசுத்தமும், ஜீவ பலியுமாய் பிதாவாகிய தேவனுக்கு அர்ப்பணித்து, பரிசுத்தமாய் வாழ்ந்து காண்பித்தார்! அதுதான் தேவன் விரும்பும் ஆராதனை! உலகம் விரும்புகிற ஆராதனை ஒன்று உண்டு! அது இந்த உலகத்தின் நவ நாகரீகத்தில்; இசையில்; பாடலில்; ஆடலில் கலந்தது! **தேவன் விரும்பும் ஆராதனை, பரிசுத்த வாழ்க்கையே!**

16) **பயமுறுத்தும் ஆவி!**

**ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்.** (2 **தெசலோனிக்கேயர்** 2:2)

சில ஆவிகள், இயேசுவின் வருகையைச் சொல்லி பயமுறுத்திக்கொண்டே இருக்கும்! அல்லது நரகத்தைப் பற்றிய கதைகளை அவிழ்த்துவிட்டுக்கொண்டே இருக்கும்! ஆவிக்குரியவன், ஆண்டவரின் வருகைக்கு எப்போதுமே ஆயத்தமாய் இருக்கிறபடியால், வருகையைக் குறித்த பயம் இருக்காது! மாறாக மகிழ்ச்சியே இருக்கும்! நரகத்தைக் குறித்த பயமும் சுத்தமாக இருக்காது! பயமுறுத்தும் ஆவிகளின் போதனைகளை இனங்காணுங்கள்! நம்பிக்கையின் தேவன் நம்மில் உண்டே!

17) **சுயபோதனை ஆவி!**

**கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும், தங்களுடைய ஆவியின் ஏவுதலைப்பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ! (எசேக்கியேல்** 13:3)

சிலர் தீர்க்கதரிசிகளைப்போல, வேடமிட்டு நடப்பர்! கர்த்தர் தங்களுக்கு ஒன்றும் வெளிப்படுத்தாமல் இருந்தும், கர்த்தர் சொன்னார், தேவன் வெளிப்படுத்தினார் என்று சொல்லி, ஏமாற்றும் ஆவி இது! அவர்களது கனிகளால் அவர்களை அறியலாம் என வேதம் வெளிச்சம் காட்டுகிறது! ***வேதத்தின் வெளிச்சத்தில் நடப்போர், ஆவிக்குரிய இருளில் இருப்பதில்லை!***

18) **வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனை!**

**ஏனெனில்**, **மாம்சத்தோடும் இரதத்தோடுமல்ல**, **துரைத்தனங்களோடும்**, **அதிகாரங்களோடும்**, **இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும்**, **வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர்** 6:12)

கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இம்மூன்றையும் ஒரு மனிதனுக்குள் திணிக்கும் வேலை இந்த ஆவிகளின் வேலைதான்! இந்த ஆவிகளின் சேனையானது, ஒரு ஆவிக்குரிய மனிதனை, நல்ல தேவ ஊழியரைக் கண்காணித்துக்கொண்டே இருப்பது! **அவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் பலவீனமாக இருக்கிறார்களோ, அந்தக் காரியத்தையே அடிக்கடி கண்முன் காண்பித்து, அவர்களை விழச்செய்வதில் கவனமாகச் செயல்படுகின்றன!** எச்சரிக்கையோடு இருப்போம்!

இந்த ஆவிகளின் செயல்பாட்டால், ஆளுகையினால், ஒரு மனிதனுக்கு செலவுகள் அதிகமாகும்; பணம் விரையமாகும்; மன உளைச்சல் ஏற்படும்; விசுவாசக்குறைவும்; தேவன்மேல்; வேதவார்த்தைகளின்மேல் நம்பிக்கையின்மையும் ஏற்படும்! மனிதர்களை நம்பி ஏமாறுவார்கள்; கடன்காரர் ஆவார்கள்! செழிப்பைத் தேடித்தேடி ஓய்ந்துபோவார்கள்! **அதனால்தான் இந்த ஆவிகளின் சேனைகளோடு நமக்குப் போராட்டம் உண்டு என்று ஆவியானவர் எழுதிவைத்திருக்கிறார்.** அந்த போராட்டம் செய்து ஜெயிக்க, **நாம் ஆவிகளைப் பகுத்துணரவேண்டியதும், சரியான சத்தியத் தெளிவும் கொண்டிருப்பதும் எவ்வளவு அவசியம்?**

*அசுத்த ஆவிகள், மேற்கண்டவாறு, பல ஆவிகளாக இருந்து ஒரே வேலையைச் (மனிதனை, தேவனை விட்டுப் பிரிப்பது) செய்கின்றன! ஆனால், பரிசுத்த ஆவியானவர், ஒரே ஆவியானவராக இருந்து பல நிலைகளில் செயல்படுகிறார்! (இக்காரியங்கள் அடுத்த புத்தகத்தில் வர இருக்கின்றன.)*

முடிவாக . . .

**அசுத்த ஆவிகளின் ஒரே நோக்கம், நம்மை தேவனை விட்டுப் பிரிப்பது! பரிசுத்த ஆவியானவரின் நோக்கம், பிதாவின் பெயர் மகிமைப்படும்படும்படியாக, நம்மை கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மறுரூபப்படுத்தி, பரலோகம் சேர்ப்பது! நிகழ்கால வாழ்க்கை எப்படிப்பட்ட சூழலுக்கு நடுவே இருந்தாலும், நம்மைக் கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியாக இருக்க வைப்பது!**

**உலக வாழ்விலும், ஆவிக்குரிய வாழ்விலும் நாம் மகிழ்ச்சியாக, திருப்தியாக, தேவனுடைய நாமம் மகிமைப்படும்படி இல்லையென்றால், நாம் நம்மை ஆளுகை செய்கிறவைகளை கவனமாக ஆராய்ந்து, மிக அதிகமாக ஜெபித்து, வேதவார்த்தைகளின்படி நடந்து, தேவ ஆவியானவரின் ஆளுகைக்குள் வரவேண்டியது அவசியம்! இல்லையேல், நாம் சத்தியத்தில் நடப்பதாகக் கற்பனை செய்துகொண்டே, பாவ சாக்கடைக்குள் வீழ்ந்துகொண்டிருப்போம்!**

நாம் தேவ ஆட்டுக்குட்டிகள், நம் ஒரே மேய்ப்பன் ஆண்டவராகிய இயேசு! அவர் நமக்கு உயிரையே கொடுத்து நன்மை செய்தவர்! நாம் உண்மையாய் வாழவேண்டும் என விரும்புகிறவர்! அதற்காகத் தம்

ஆவியானவரை இவ்வுலகத் துணையாளராக நமக்கு ஏற்படுத்தியுள்ளார்! வேத வார்த்தைகளால் இடைப்படுகின்றார்! முழு இருதயத்தோடு, முழு ஆத்துமாவோடு, முழு பெலத்தோடு அவரிடம் அன்புகூர அர்ப்பணிப்போம்! ஆமென்!

எந்த ஆவியையும் மேற்கொண்டு வெல்லக்கூடிய ஒரு மனிதராக, நம்மை மாற்ற பரிசுத்த ஆவியானவரால் முடியும்! அசுத்தஆவிகளின் ஆளுகையை உடைக்க முடியும்! அப்படிப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகளைக் குறித்த அடுத்த புத்தகத்தின் வழியாக மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன்! கர்த்தர் மாத்திரம் மகிமைப்படுவாரக! ஆமென்!

**தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (2தீமோ 1:7)**

இந்தப்புத்தகம், நம்மைச் சுற்றியுள்ள ஆவிகளைப் பகுத்துணர்ந்து, பரிசுத்தமாய் நடந்துகொள்ள உறுதுணையாய் இருக்கும் என்று நம்புகிறேன். தொடர்ந்து, தேவனுக்காய் அடியேன் பிரயோஜனப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள்! நன்றிகள் பல!

அன்புடன்,

Bro A.SASIKUMAR.
GRACE INDIA MINISTRIES,
TIRUPPUR.

**ஆலோசனைகளுக்கு,**
9843724467 , 9952427477